

நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் ஆகியோர் 09.10.2024 அன்று நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில், சிவகங்கை மாவட்டம், காரைக்குடி மாநகராட்சி அலுவலகத்தின் முதல் அறிமுக கூட்ட விழாவில் பங்கேற்று சிறப்பித்து, காரைக்குடி மாநகராட்சி மேயர் சே.முத்துத்துரைக்கு சிறப்பு செய்தார்கள். உடன் சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித், சிவகங்கை நாடாளுமன்ற உறுப்பினர் கார்த்தி ப. சிதம்பரம், மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஆ.தமிழரசி ரவிக்குமார் மற்றும் காரைக்குடி மாநகராட்சி ஆணையாளர் திருமதி எஸ்.சித்ரா சுகுமார், காரைக்குடி துணை மேயர் நா.குணசேகரன் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட பலர் உள்ளனர்.



சென்னை, கோபாலபுரம் இல்லத்தில், நேற்று முன்தினம் (11.10.2024) முரசொலி செல்வம் அவர்களின் உடலுக்கு, திரைப்பட நடிகர் பார்த்திபன் மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு ஆறுதல் கூறினார்.



சென்னை, கோபாலபுரம் இல்லத்தில், நேற்று முன்தினம் (11.10.2024) முரசொலி செல்வம் அவர்களின் உடலுக்கு நக்கீரன் இதழ் ஆசிரியர் நக்கீரன் கோபால் மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு ஆறுதல் கூறினார்.



தருமபுரி கிழக்கு மாவட்டம் பென்னாகரம் குள்ளனூர் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி மாணவ – மாணவியரின் வாசிப்பு திறன்,எழுத்தறிவு குறித்து திறன்மிகு வகுப்பறைகளை பார்வையிட்டு விரிவாக ஆய்வு செய்தார்.பின்னர் முதலமைச்சர் காலை உணவுத் திட்ட செயல்பாடுகள் குறித்து உணவின் தரத்தை ஆய்வு செய்து பணியாளர்களுக்கு ஆலோசனைகள் வழங்கினார்.

### மயிலாடுதுறை மாவட்டம் - தரங்கம்பாடி,பூம்புகாரில் - சுற்றுலாத் துறையின் சார்பில்

# ரூ.31.62 கோடியில் வளர்ச்சிப் பணிகள்: அமைச்சர் இரா.இராஜேந்திரன் நேரில் ஆய்வு!

## நிவேதா எம். முருகன் எம்.எல்.ஏ., எம்.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ, பங்கேற்பு!

மயிலாடுதுறை, அக். 13-

மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி மற்றும் பூம்புகார் சுற்றுலா தளத்தில் சுற்றுலாத் துறையின் சார்பில் ரூ.31 கோடியே 62 இலட்சத்து 98 ஆயிரம் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் வளர்ச்சிப் பணிகளை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடியில் கவர்னர் மாளிகை ரூ.4 கோடியே 35 இலட்சத்து 7 ஆயிரம் மதிப்பீட்டிலும், டேனிஷ் கோட்டை ரூ.3 கோடியே 63 இலட்சத்து 47 ஆயிரம் மதிப்பீட்டிலும்;, சீர்காழி ஒன்றியம் பூம்புகார் சுற்றுலா வளாகம் ரூ.23 கோடியே 64 இலட்சத்து 44 ஆயிரம் மதிப்பீட்டிலும் புதுப்பிக்கப்பட்டு வருவதை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன். நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். ஆய்வின்போது,மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன், சீர்காழி சட்டமன்ற உறுப்பினருமான எம்.பன்னீர்செல்வம்,மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.சுதா, மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ராஜ்குமார் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மை செயலாளர் பி.சந்தர மோகன், சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சி.சமயமூர்த்தி, மாவட்ட ஆட்சியர் ஏ.பி.மகாபாரதி, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராம லிங்கம், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் த.உமா மகேஷ்வரி சங்கர் ஆகியோர் உடன் இருந்தனர்.

பின்னர் சுற்றுலாத்துறை அமைச்சர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில்

மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள கலாச்சார பாரம்பரிய நகரான தரங்கம்பாடியில் கவர்னர் மாளிகை ரூ.4 கோடியே 35 இலட்சத்து 7 ஆயிரம் மதிப்பீட்டிலும், டேனிஷ் கோட்டை ரூ.3 கோடியே 63 இலட்சத்து 47 ஆயிரம் மதிப்பீட்டிலும்; சீர்காழி வட்டம் பூம்புகார் சுற்றுலா வளாகம் ரூ.23 கோடியே 64 இலட்சத்து 44 ஆயிரம் மதிப்பீட்டிலும் பழமை மாறாமல் புதுப்பிக்கப்பட்டு வருவதை ஆய்வு செய்யப்பட்டது.

அதன் அடிப்படையில், தமிழர்களின் பண்பாடு மற்றும் பாரம்பரிய சின்னமாக விளங்கிய துறைமுக நகரமான பூம்புகார் சுற்றுலா வளாகம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் கட்டப்பட்ட பூம்புகார் கலைக்கூடம் புதுப்பித்தல், 1,400 மீட்டர் சுற்றுச்சுவர் அமைத்தல், வரவேற்பு பகுதிகள், வாகன நிறுத்துமிடம், உலாவும் சாலை அமைத்தல், பொருள் வைப்பறை, தகவல் மையம், சிலைகள் அமைத்தல், கழிப்பிட வசதிகள் ஏற்படுத்துதல், மின்விளக்குகள் அமைத்தல் உள்ளிட்ட மேம்பாட்டு பணிகள் நடைபெற்று வருவதை பார்வையிடப்பட்டது. மேலும், தரங்கம்பாடியின் சிறப்பு அம்சமான டேனிஷ் கோட்டையானது 1620 இல் கட்டப்பட்டுள்ளது. இதனை பழமை மாறாமல் புதுப்பிக்கும் பணியும் நடைபெற்று வருகிறது. இப்பணிகளின் தரத்தினை ஆய்வு செய்து, ஒப்பந்த கால கெடுவிற்குள், பணிகளை விரைவாகவும், தரமானதாகவும் மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் வளர்ச்சியில் முக்கிய பங்கை அளித்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தை 1971ஆம் ஆண்டில் உருவாக்கினார்கள். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம் ஓட்டல் தமிழ்நாடு என்ற பெயரிலான தங்கும் விடுதிகள், அமுதகம் என்ற பெயரிலான உணவு விடுதிகள், சுற்றுலா பயணத்திட்டங்கள், சுற்றுலா பேருந்து சேவைகள், படகு சேவைகள், தொலைநோக்கி இல்லங்கள் என சுற்றுலா பயணிகளுக்கு பல்வேறு சேவைகளை வழங்கி வருகின்றது. முதலமைச்சர் அவர்களின் சீரிய முயற்சிகளால் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் உணவகங்கள், தங்கும் விடுதிகள் ஆகியவை புதுப்பிக்கப்பட்டு, புதுப்பொலிவு பெற்றதன் காரணமாக விரைவான வளர்ச்சியை பெற்று இந்தியாவிலேயே சுற்றுலாத்துறையில் முதன்மை மாநிலமாக விளங்கி வருகின்றது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் 52 வகையான பல்வேறு வகையான சுற்றுலா பயண திட்டங்கள் பொதுமக்களின் வசதிக்காக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதற்காக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் குளிர்சாதன வசதியுடன் கூடிய வால்வோ சொகுசு பேருந்துகள், அதிநவீன உயர்தர சொகுசு பேருந்துகள், 18 இருக்கைகளுடன் கூடிய சிறிய ரக சொகுசு பேருந்துகள் என மொத்தம் 14 சொகுசு பேருந்துகளை இயக்கி வருகிறது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தமிழ்நாடு முழுவதும் 26 ஹோட்டல்களை நேரடியாக நிருவகித்து வருகின்றது. இவற்றில் 492 குளிரூட்டப்பட்ட அறைகளும், 188 சாதாரண அறைகளும், மலைப்பகுதி சுற்றுலாத்தளங்களில் 172 அறைகளும் என மொத்தம் 852 அறைகள் உள்ளன. மேலும், இந்து சமய அறநிலையத்துறையுடன் இணைந்து திருவண்ணாமலை, இராமேஸ்வரம், காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் ஆலயம் என்ற பெயரிலான உணவகத்துடன் கூடிய தங்கும் விடுதிகள் 160 சாதாரண அறைகளும், 157 குளிரூட்டப்பட்ட அறைகள் என மொத்தம் 317 அறைகளுடன் செயல்பட்டு வருகின்றன. ஹோட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகள், ஆலயம் தங்கும் விடுதிகள் என்ற இரண்டு பிரிவுகளிலும் சேர்த்து மொத்தம் 1,169 அறைகளுடன் தமிழ்நாட்டின் மிகப் பெரிய அளவிலான தங்கும் வசதி சேவையை சுற்றுலா பயணிகளுக்கு அளித்து வருகின்றது.

மயிலாடுதுறை மாவட்டத்தில், பூம்புகார் மற்றும் தரங்கம்பாடி பகுதியில் சுற்றுலாத்துறையின் சார்பில் நடைபெற்று வரும் வளர்ச்சி பணிகள் தொடர்ந்து கண்காணித்து விரைவாக மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது என சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தெரிவித்தார்

இவ்வாய்வின்போது தி.மு.க. மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர் அருள்செல்வம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் முத்து மகேந்திரன் ஜி.என். ரவி, மாவட்ட கழக துணை செயலாளர்கள் மு. ஞானவேலன், எஸ்.செல்வமணி, ஒன்றிய கழக செயலாளர்கள் என்.இளையபெருமாள், எம்.அப்துல் மாலிக், பி.எம். அன்பழகன், அமிர்த. விஜயகுமார், மங்கை எம். சங்கர், ஏ.ஆர். ராஜா, ப.முருகமணி, பஞ்ச்.குமார், ஏ.ஜி.ஜே .பிரபாகர், நகர செயலாளர்கள் ம.சுப்ப ராயன், குண்டாமணி (எ) என். செல்வராஜ், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம். ஸ்ரீதர், தரங்கம்பாடி பேரூர் செயலாளர் முத்துராஜா, சீர்காழி ஒன்றிய குழு தலைவர் கமலஜோதி தேவேந்திரன்,தரங்கம்பாடி பேரூராட்சி தலைவர் சுகுணா சங்கரி குமரவேல்.

மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் .வெடி பாலமுருகன், காளி.தேசப்பன், வி.எஸ்.என்.செந்தில்,. மாவட்ட ஊராட்சி உறுப்பினர் தியாக.விஜேஸ்வரன், சீர்காழி வருவாய் கோட்டாட்சியர் உ.அர்ச்சனா, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழக மண்டல மேலாளர் தவெங்கடேசன் , தரங்கம்பாடி பேரூராட்சி துணை தலைவர் பொன்.இராஜேந்திரன்உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சி.பி. பவளவண்ணன்

அக்டோபர் 13 (1975)



சென்னை, சைதை பகுதியில் இளம் வயதிலேயே தொண்டராக பணியாற்றி கழக வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டவர்.

தலைவர் கலைஞர்மீது மாறா அன்பும் பாசமும் கொண்டவர்.

கழகம் நடத்திய அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர். பேச்சாளராகவும் விளங்கியவர்.

1964ல் சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினராகவும் – 1967ல் சென்னை மாநகர துணை மேயராகவும் பொறுப்பு வகித்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.



நினைவில் வாழும் திராவிடச் சுடர்
முன்னாள் அமைச்சர், சட்டமன்ற உறுப்பினர்

## பரிதிஇளம்வழுதி

முன்னாள் - கழக துணை பொதுச்செயலாளர்

### ஆறாம் ஆண்டு நினைவு அஞ்சலி

நாள் : 13.10.2024 ஞாயிற்றுக்கிழமை



எங்களின் அன்பே!

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞரின் இந்திரஜித் வீர அபிமன்யுவாய்,
கழகத் தலைவர் தளபதியாரின் உடன்பிறப்பாய்,
தாங்கள் கழகத்திற்காக பணியாற்றியதை நெஞ்சில் நிறுத்தி
கழகத்தலைவர் மற்றும் சின்னவர் தலைமையில்
தொண்டு செய்வோம் என்றும் கழக தொண்டர்களாய்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்

**உதயகுமாரிஇளம்வழுதி** B.SC.,
**பரிதிஇளம்சுருதி** BCA.,M.A.,LLB.,MC ■ **Y.R.நந்தினி** BHMS
கழக அயலக அணி மாநில துணை செயலாளர்
99 வது வார்டு மாமன்ற உறுப்பினர் – எழும்பூர் தொகுதி
**வி.நிரேஷ்** B.E.,M.Tech., ■ **இ.அனுயாழினி** M.A.,(HR)
**N.நேதாஜியாஷ்** ■ **P.பரிதிவேல்**

குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள்